**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC. 50 /2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | செல்வராஜ் | Prosecution | P.W -3 LW- 3 Chief and Cross |
| Husband Name | தனபால் | Defence | |
| Village | பொன்னியம்மன் கோயில் தெரு மங்கைமடம் | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 57- 2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **14.08.2023.**
சத்தியபிரமாணம் பெறப்பட்டது. **முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 மற்றும் எதிரியை எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கின் எதிரியை சம்பவத்தன்று நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. கடந்த 22.10.2016- ம் தேதி மாலை 7 மணிக்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த இடத்தில் இருந்து மங்கைமடம் RKP சேம்பர் வெளியே வந்து நின்று கொண்டிருந்தபோது இந்த வழக்கில் இறந்தவர் அவரது TVS XL TN 51 AY 0187 என்ற வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி டீசல் மற்றும் காய்கறி வாங்கிக்கொண்டு திருநகரி ரோட்டில் வந்துக்கொண்டிருந்தபோது ஆர். கே.பி சேம்பர் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த எதிரி ராஜா என்பவர் Hero Honda இருச்சக்கர வாகனத்தில் வாகனத்தை அதிகவேகமாக ஓட்டி வடக்கே செல்ல வேண்டியவர் தெற்கு நோக்கி சென்று இருச்சக்கர வாகனத்தில் மோதி இந்த வழக்கின் இறந்தவருக்கு வலது கால், கை மற்றும் உடம்பில் இரத்த காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, அ.சா.1ன் அப்பாவின் பின்புறம் அமர்ந்திருந்த முருகனுக்கு தலையில் இரத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை  இல்லை

மறுவிசாரணை - இல்லை